வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 88 of 2023

வழக்கு சாட்சி – PW4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிச்சந்திரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | பழனிச்சாமி | தொழில் | : | நில தரகர் மற்றும் Wast Commission |
| கிராமம் | : | சேவூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | அவினாசி | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 0703.2025.

**முதல் விசாரணை :**

**நாள் : 07.03.2025**

எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. புகார்தாரர் சதீஷ்குமார் எனக்கு தெரியும், எதிரி பாபு எனக்கு தெரியும் அவர் நான் வேஷ்டு எடுக்கும் கம்பெனியின் உரிமையாளர் மணியின் தம்பி ஆவார். 2015ம் வருடத்திலிருந்து மணி எனக்கு பழக்கமானவர். 23.08.2022ம் தேதியன்று அம்மாபாளையத்தில் உள்ள மணியின் கம்பெனிக்கு சென்றிருந்தேன். எனது சொந்த ஊர் சேவூர் நான் திருப்பூருக்கு வந்தார் மணியின் கம்பெனிக்கு செல்வேன். அன்றையதினத்தில் மணி அவரது குடும்பம் மற்றும் வியாபார செலவிற்காக அவரது நண்பரிடம் பணத்தை கடனாக கேட்டிருப்பதாக என்னிடம் கூறி என்னை சாட்சி கையொப்பம் போட என்னை அழைத்து சென்றார். நாங்கள் பொங்கலூரியில் உள்ள சதீஷ்குமாரின் வீட்டிற்கு நாங்கள் சென்றோம். அப்போது எதிரி பாபு மற்றும் நாராயணசாமி அங்கு வந்தார்கள். அங்கு வைத்து மணியின் கம்பெனி லெட்டர் பேடில் கையொப்பம் செய்தேன். நாங்கள் கையொப்பம் செய்தபிறகு சதீஷ்குமார், மணி மற்றும் பாபுவிற்கு ரூ.13 லட்சத்தை கடனாக கொடுத்தார். அதன்பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் லெட்டர் பேடில் (ம.சா.ஆ.1 ஆவணம்) கையொப்பம் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1)லெட்டர் பேடில் என்ன வாசகம் எழுதியிருந்தது என்று நான் படித்து பார்த்தேன். 45 காலதாமதத்தில் ரூ.1 1/2/– வட்டிக்கு 13 லட்சம் வாங்கியதாக எழுதப்பட்டிருந்தது. மணியின் கம்பெனி அம்மாபாளையத்தில் ராதாகிருஷ்ணன் ரோடு, ராமகிருஷ்ணன் ஸ்கூல் பின்புறம் உள்ளது. எங்கு வைத்து டைப் செய்தது என்றால் மணி வெளியில் வைத்து டைப் செய்து கொண்டு வந்தார். லெட்டர் பேடில் உள்ள வாசகங்கள் யார் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. பொதுவாக கடன் கொடுக்கும்போது பிராம்சரி நோட் எழுதி வாங்குவார்கள் என்றாலும் லெட்டர் பேடில் வாங்கமாட்டார்கள் என்றால் சரிதான். ஆனால் மணி அன்றையதினம் லெட்டர் பேடில் டைப் செய்து கொடுத்தார். மணிக்கு 58 வயது இருக்கும்.

2)அந்தசமயத்தில் என்ன போன் நம்பர் பயன்படுத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியும் மனப்பாடமாக தெரியாது போனில் உள்ளது. எனக்கு வழக்கு விவரங்கள் எதுவும் தெரியாமல் சதீஷ்குமார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் வேஷ்டு வியாபாரம் செய்வதாகவும் கையொப்பம் செய்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் பாபுவின் வீடு அம்மாபாளையத்தில் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள் நான் சென்றதில்லை. ரசீதில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தேதி என்ற இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3)லெட்ட ர் பேடு ஆவணத்தில் Revenue Stamp ஒட்டப்பட்டிருந்ததா என்றால் இல்லை. சதீஷ்குமார் பினாமிக்காக வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறார் என்றாலும் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல நான் நடந்ததை சொல்கிறேன். சதீஷ்குமார் வீட்டிற்கு அருகில் உள்ள நபர்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். சதீஷ்குமாரின் நண்பர் நாராயணசாமி மட்டும் வந்திருந்தார். மணி இறந்துவிட்டதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனக்கு வழக்கின் தரப்பினர்களை யார் என்றே தெரியாது என்றாலும் சரியல்ல.

4) நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் லெட்டர் பேடு ஆவணம் தயார் செய்யபடவில்லை என்றாலும் பணம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து லெட்டர் பேடை எடுத்து சென்று என் போன்ற நபர்களிடம் வைத்து லெட்டர் பேட் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. லெட்டர் பேடில் உள்ள மணியின் கையொப்பம் அவருடையதல்ல என்றால் சரியல்ல. என் முன்பாக கையொப்பம் செய்தார்.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA Date: 2025.03.07 05:10:54 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்
வழக்கு எண் : STC 88 of 2023
வழக்கு சாட்சி – PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேமா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | பழனிச்சாமி | தொழில் | : | வங்கி மேலாளர் |
| கிராமம் | : | கரூர் வைசியா வங்கி, பொங்கலூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 0703.2025.

**முதல் விசாரணை :**

**நாள் : 07.03.2025**

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அழைப்பாணையில் கேட்கப்பட்டுள்ள இந்த வழக்கின் புகார்தாரர் சதீஷ்குமார் த/பெ. கந்தசாமி என்ற பெயரில் உள்ள சேமிப்பு கணக்கு எண். 1834153000000131 கணக்கானது 2017 ம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது. அந்த கணக்கில் 01.06.2022 முதல் 31.08.2022 ம் தேதி வரையிலான கணக்கு பட்டியலை இந்த வழக்கில் ம.சா.ஆ.14 ஆக தாக்கல் செய்கிறேன். 22.08.2022 ம் தேதியன்று ரூ.13 இலட்சத்தை கணக்குதாரர் பணமாக எடுத்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1)நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.14 ஆவணத்தில் 8 மாதம் மட்டும் அதிகமாக வரவு செலவு நடந்துள்ளது என்றாலும் அதற்கு முன்பாகவும், பின்பாகவும் குறைவாக வரவுசெலவு நடந்துள்ளது என்றால் சரியல்ல ஜூன் மாதமும் ஆகஸ்டு மாதமும் அதிகமாக நடந்துள்ளது ஜூன் மாதம் குறைவாக நடந்துள்ளது. ஆகஸ்ட் மாத பரிவர்த்தனை கேட்காததால் நான் கொண்டு வரவில்லை. 22.08.2022 ம் தேதி என்ன தொகை இருப்பு இருந்தது என்று குறிப்பிட்டு ம.சா.ஆ.14 ஆவணத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் ஒவ்வொரு நாளும் காண்பிக்கப்படாது.

2) Rainbow Savings Accounts என்பதால் ஒவ்வொரு நாளிற்கான இருப்பு காண்பிக்கப் படாது. அவர் வைத்திருக்கும் பணத்தில் 10,000 வீதம் Fixed Deposit ஆக Automatic ஆக மாற்றப்பட்டு கணக்குதாரர் திரும்ப எடுக்கும்போது Fixed Deposit ஐ முடித்து அவருக்கு பணமாக்கி கொடுக்கப் படும் அதனால் இருப்பு காண்பிக்கப்படாது. சாட்சி தற்போது சேமிப்பு கணக்கு இருப்பையும் Fixed Deposit இருப்பையும் காண்பிக்கக்கூடிய கணக்கு பட்டியலை தாக்கல் செய்கிறார். அந்த ஆவணம் ம.சா.ஆ.15 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி 21.08.2022 ம் தேதியன்று சேமிப்பு கணக்கில் இருப்பு என்பது 1,05,008/–ம் TD என்று சொல்லப் படும் 11,00,000/–மும் சேர்ந்தது ஆகும்.

22.08.2022ம் தேதி புகார்தாரர் 13 இலட்சத்தை வெளியே எடுத்த பின்பு அவரது கணக்கு இருப்பானது 394/- ஆகும்.

3) ம.சா.ஆ.15 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள Terms Deposit என்பது காண்பிக்கப்பட்டு உள்ளதா என்றால் அவ்வாறான வசதி வங்கியில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 22.08.2022ம் தேதிக்கு பின்பாக அவரது வங்கி கணக்கு இருப்பு என்பது 394 லிருந்து 150 ஆக குறைந்துள்ளது.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.